பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : மாசி 12 (24—2—68) சனி ★ வெளியூர் : மாசி 13 (25—2—68) ஞாயிறு [இதழ் : 211

மாநிலங்களை மதியாத மத்திய அரசு!

பெங்களூர், பிப். 24—

"ஒவ்வொரு தடவையும் மத்திய ஊழியர்களின் விலைவாசி உயர்வுப்படி உயர்த்தப்படும்போது 'மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்க வேண்டும்' என்ற கோரிக்கைக்கு மத்திய அரசின் ஒத்துழைப்புக் கிடைக்காதது வருந்தத்தக்கதாகும். இந்த நிலைமையில் மாநில அரசுகளுக்குத் தொல்லைகள் உருவாகியிருக்கின்றன."

--நிஜலிங்கப்பா

மாணவர்கட்கு அண்ணா--காமராசர் தரும் நம்பிக்கை

மொழிச் சிக்கலில் முடிவு காணக் கூடிப் பேசினர்

மீண்டும் பேச்சு நடத்தி உருவான திட்டம் வகுக்க முயற்சி

சென்னை, பிப். 24—

மொழிச் சிக்கலில் நல்லதொரு தீர்வு காணும் நோக்குடன் நேற்று அறிஞர் அண்ணா அவர்களும் — திரு. காமராசரும் சந்தித்து, இரண்டு மணி நேரம் விவாதித்தனர்.

இந்தச் சந்திப்பின் மூலம், மனநிறைவூட்டும் வகையில் தீர்வு காண்பதற்கான அறிகுறி தோன்றியுள்ளது.

இரு தலைவர்களும் சந்தித்ததன் விளைவாகக் கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டிருப்பதுடன், மீண்டும் இருவரும் கூடிப்பேசுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு 9 மணிக்கு, நுங்கம்பாக்கத்தில் உள்ள கழகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. வி பி. ஆசைத்தம்பி அவர்களின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இரண்டு மணி நேரத்துக்கு மேல் மொழிச் சிக்கல் குறித்து, இரு தலைவர்களும் மனம்விட்டு விரிவாகப் பேசினர்.

மொழிப் பிரச்சினைக்கு நல்ல முறையில் தீர்வு காண அண்ணா அவர்கள் ஆவலாக இருப்பதாகத் தெரிவித்த திரு. காமராசர், 'இதன் மூலம், மனநிறைவூட்டும் தீர்வு காண இயலும்' எனத் தாம் நம்புவதாகவும் கூறினர்.

சந்திப்புக்குப் பின், அண்ணா அவர்கள் மருத்துவமனைக்குச் சென்றார்கள்.

திரு. காமராசர் இன்று டில்லிக்குப் புறப்பட்டார்; டில்லியிலிருந்து திரும்பியதும் இருவரும் மீண்டும் கூடிப்பேசுவர்.

கூட்டறிக்கை

இரு தலைவர்களும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :—

"மொழிப் பிரச்சினை குறித்து இருவரும் விரிவாகக் கலந்துரையாடினோம். மாணவர்களின் நலனுக்கு இடையூறு ஏற்படாவண்ணம், நல்லுறவு அடிப்படையில் அமைதியான தீர்வு காண மீண்டும் கூடிப் பேச இருவரும் ஒப்புக்கொண்டுள்ளோம்.

"எனவே, மாணவர்கள் தங்கள் நேரடி நடவடிக்கைகளைக் கைவிடுவதுடன், பேச்சுவார்த்தையின் பயனாக மனநிறைவு கொள்ளும் வகையில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையில், அமைதியான சூழ்நிலை நிலவ உதவுமாறும் கேட்டுக் கொள்கிறோம்."

தமிழகத்தின் மொழித் தீர்மானம்

கருநாடக சட்டமன்றத்தில் எதிரொலி!

கருநாடக மாநிலச் சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் கே. எச். சீனிவாசா என்பவர் பேசும்பொழுது,

"ஆங்கிலத்தில் 'முட்டை' (0) வாங்கியிருந்தாலும், தேர்வில் வெற்றி பெற்றுவிட்டதாகக் கருதப்பட வேண்டும் என்று கூறி, கிளர்ச்சிகளைத் தூண்டிவிடும் நிலைமை நாட்டில் உள்ளது நல்ல அறிகுறியல்ல"

என்று கூறினர்.

"பொதுமக்களில் ஒரு பகுதியினரும், பெரும்பாலான மாணவர்களும், தமிழக அரசு நிறைவேற்றியுள்ள மொழித் தீர்மானத்தை ஆதரிக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?"

என்று ஜே. பி. மல்லராதையா என்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, 'தெரியாது' என்று பதிலிறுத்தார்—கல்வி அமைச்சர் சங்கர கௌடா.

தமிழகத்தில் காங்கிரசுக்கு எதிர்காலம் இல்லை!

ஜி. பி. சோமசுந்தரம் அறிவுரை

புதுடில்லி, பிப். 24—

"கடந்த 20 ஆண்டுக்காலமாகத் தமிழக மக்கள், காங்கிரசுக்காரர்களின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி வாழ்ந்து வந்ததை உணர்ந்து விட்டனர்! இன்று அவர்களது கனவுகள் தி. மு. கழக ஆட்சியில் நனவாகி வருவதையும் உணர்ந்திருக்கிறார்கள்!

"காங்கிரசு தனது நிலையை மட்டும் இழக்கவில்லை; தனது எதிர்காலத்தையும் — தமிழகத்தைப் பொறுத்தவரையில் — இழந்துவிட்டது!

அதிகாரக் குவிப்பு!

"அதிகாரங்கள் அனைத்தும் தற்போது மத்திய அரசில் குவிந்து கிடக்கின்றன; மாநில அரசுகள் தங்கள் நிலைமைகளை உணர்ந்து நாட்டை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சூழ்நிலையில் இல்லை; 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பல்வேறு வகையான சூழ்நிலைகளுக்கிடையில் அரசியல் சட்டம் எழுதப்பட்டது. அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் தற்போதுள்ள நிலைமைகளை யூகித்தறிய மறந்துவிட்டனர்!

"நாட்டு ஒற்றுமையின் பெயரால் நினைவுபடுத்த விரும்புகிறேன் – அரசியல் சட்டத்தைத் திருத்துவது பற்றி மறுபரிசீலனை செய்ய இதுவே நல்ல நேரம்!

வருவாய் பெருக யோசனை!

"மத்திய அரசின் நிர்வாகச் செலவுகளைக் குறைக்கவேண்டும்; பாதுகாப்புச் செலவை கணிசமான அளவில் குறைத்திட வேண்டும்; வரி பாக்கிகள் வசூலிக்கப்படாமலிருப்பதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்; பொதுத் துறையில் இலாபம் தரத்தக்க தொழில்களை அரசே ஏற்று நடத்த வேண்டும்.

"மத்திய அரசு இந்த நான்கு வழிமுறைகளைக் கையாளுமானால் அது, கூடுதல் வருவாயை பெற முடிவதுடன், அதனை மாநிலங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கலாம்.

தமிழ்நாடு பெயர்

"சென்னை மாநிலத்தின் பெயரை, 'தமிழ்நாடு' என பெயர் மாற்றக் கோரும் தமிழக அரசின் தீர்மானத்தைப் பற்றி மத்திய அரசு விரைவில் நல்ல முடிவு எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

—(மாநிலங்களவையில)

இந்திரா காந்தியின் சிறுபிள்ளை வாதம்

மக்களவையில் செ. கந்தப்பன் கண்டனக் குரல்

சூடு தணிந்ததும் கூடிப் பேசி முடிவு காணப்படுமாம்

புதுடில்லி, பிப். 23—

நாடாளுமன்ற மேலவையில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கும்வகையில் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி பேசுகையில், மொழிப் பிரச்சினை தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கு, கழக உறுப்பினர்கள் கடும் கண்டனக் குரல் எழுப்பினர்.

மொழிப் பிரச்சினை சம்பந்தமாக அதிக அளவில் உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதாகவும், எழுந்துள்ள சூடு தணிந்ததும், எதிர்க் கட்சித் தலைவர்களோடு கலந்து பேசத் தயாராயிருப்பதாகவும் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

மொழிச் சட்டத்துடன் சேர்த்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விளைவாக, இந்தி பேசாத மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமை பற்றி தெரிவிக்கப்பட்ட கருத்துக் பதிலளிக்க முனைந்த அவர், 'இங்கியைக் கற்கும் சுமை இந்தி பேசாத பகுதி மக்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும்தான் ஏற்பட்டிருக்கிறது' என்றார்.

இந்த நேரத்தில் கழக உறுப்பினர் கந்தப்பன் குறுக்கிட்டு, 'இது சிறுபிள்ளை வாதம்' என்றார்.

கந்தப்பன் கூறியதை எதிர்த்துக் காங்கிரசுக் கட்சித் தரப்பிலிருந்து குரல்கள் எழுந்தன!

அமைதியாக இருக்கும்படி காங்கிரசுக்காரர்களைக் கேட்டுக் கொண்டு, தொடர்ந்து பேசிய இந்திரா காந்தி, 'வடநாட்டில் பேசப்படும் மொழிகள் பற்றி உறுப்பினர் அறிய மாட்டார்' என்று குறிப்பிட்டார்!

உள்துறை அமைச்சர் கூறியதற்கு மாறாகத் தலைமை அமைச்சர் தெரிவிப்பதாகத் தி. மு. கழக உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்!

"இந்தி பேசாத மக்களுக்குச் சிறிதளவு சுமைதான் கூடுதலாக இருக்கும்" என்றுதான் உள்துறை

(3-ம் பத்தி பார்க்க)

போட்டியின்றித் தேர்வு!

புதுச்சேரி, பிப். 24—

புதுச்சேரி சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவராக வி. வெங்கரசுப்பா ரெட்டியார் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

அமைச்சர் கூறியதாக இந்திரா கூறினர்.

"எப்படியிருப்பினும், மத்திய அரசின் தலைமைச் செயலகம், மொழி பெயர்க்கும் சுமையைத் தாங்கித்தான் ஆக வேண்டியுள்ளது" என்றார்.

"எதையும் மூடிமறைக்க அரசு விரும்பவில்லை; எந்தவிதச் சங்கடம் இருந்தாலும் விவாதித்து ஒரு வழி காணவே விரும்புகிறது" என்றார் அவர்.

அரசியல் சட்டத்தில் 'தமிழ்நாடு'

திருத்தம் கோரும் வி. வி. இராமசாமி மசோதா

புதுடில்லி, பிப். 24—

'சென்னை மாநிலம்' என்று அரசியல் சட்டத்தில் இருப்பதை, 'தமிழ் நாடு' எனத் திருத்துவதற்கான மசோதாவினை, நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் திரு. வி. வி. இராமசாமி கொண்டு வந்தார்.

1967 ஜூலை 18-ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேறிய தமிழ் நாடு பெயர் வைப்புத் தீர்மானத்தினையொட்டியே, அரசியல் சட்டத்தைத் திருத்தும் வகையில் இந்த மசோதாவை திரு. இராமசாமி கொண்டுவந்திருக்கிறார்.

இம்மசோதாவை முன்மொழிந்து அவர் பேசுகையில், 'தமிழகத்துப் பொதுமக்களின் ஒருமித்த கருத்தும், வரலாறு—மொழி—பண்பாட்டு அடிப்படையிலும் இப்பெயர் மாற்றத்துக்கு ஆதரவாக இருக்கின்றன' என்பதை எடுத்துரைத்தார்.

இந்திராவுடன் சந்திப்பு

திரு. வி. வி. இராமசாமி, தாம் கொண்டு வந்துள்ள மசோதா குறித்து தலைமையமைச்சர் இந்திரா காந்தியுடன் சந்தித்துப் பேசினார்.

'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டும் வகையில் அரசியல் சட்டத்துக்குத் திருத்தம்கொண்டு வரப்படும் — எனத் தலைமையமைச்சர், திரு. வி.வி. இராமசாமியிடம் கூறியதாகத் தெரிகிறது.

ஏன் இந்தப் பாகுபாடு?

இலங்கையிலிருந்து அடித்து மிரட்டி விரட்டப்படும் இந்தியர்கள், அகதிகளாக—பிச்சைக்காரர்களாக இந்திய அரசால் கருதப்படுகின்றனர்!

அதேபோல், தங்கள் மிடுக்கு—ஆணவம்—மேற்கு மோகம் காரணமாக—கென்யாவில் (குடியுரிமை தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டபோதும்)—அந்நாட்டு உரிமையை ஏற்றுக்கொள்ளாமல் இங்கிலாந்து குடிமக்களாகப் பதிவு செய்துகொண்ட 'இந்தியர்'கள்பற்றி நாடாளுமன்ற மேலவையில் கண்ணீர் வடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையே—பர்மாவே தங்கள் தாயகம் என்று பரம்பரையாகக் கருதி உழைத்து அந்நாட்டுக்கு மெருகேற்றிய மக்கள், அநியாயமாக—வாழ்நாளின் சேமிப்பு முழுவதையும் பறிகொடுத்துவிட்டு—தமிழகக் கடற்கரையில் தேம்பி அழுதுகொண்டிருக்கிறார்கள்!

இலங்கை, பர்மா அரசாங்கங்களிடம் மனித சக்திக்கு உட்பட்ட வகைகளிலெல்லாம் குடிபுரிமைக்காகப் போராடிக் களைத்துப் போய், தங்களை அகதிகளாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்!

ஆனால், கென்யாவும், மற்ற கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளும், ஆங்காங்கிருந்த இந்திய வம்சாவழியினருக்குப் போதிய சந்தர்ப்பமளித்து குடியுரிமை பெற்றுக்கொள்ளும்படிச் செய்தும் 'இந்தியர்' மறுத்து, தங்களை இங்கிலாந்து குடிமக்களாகப் பதிவு செய்துகொண்டனர்! தாங்கள் வாழும் நாட்டிலும் இல்லாமல்—தங்கள் வம்சாவழி நாடான இந்தியாவின் குடிமக்களாகவும் ஆகாமல்—இரண்டையும் துச்சமென மதித்து இங்கிலாந்து குடியுரிமைக்கு மனுப் போட்டுக்கொண்டிருப்பவர்களைக் குறித்து நாடாளுமன்றம் விவாதிக்கிறது! அவர்கள் நலன் குறித்து அத்தனையும் செய்யப்படுவதாக உறுதியளிக்கப்படுகிறது!

கிழக்காசிய நாடுகளில் கூலிகளாகவும், எடுபிடி ஏவலர்களாகவும், சிறு கடை வைத்துப் பிழைப்பவர்களாகவும் வாழ்ந்த 'இந்தியர்'களுக்கும்—கிழக்கு ஆப்பிரிக்காவில் முதலாளிகளாகவும், செழுமையான வணிகர்களாகவும் வாழ்ந்த 'இந்தியர்'களுக்கும் இப்போது இங்கு காட்டப்படும் வேறுபாடு நமக்குப் புரிகிறது!

ஒருமைப்பாட்டு உணர்வும் தியாக மனப்பான்மையும் ஒருவழிப் பாதையாகவே இருப்பதைக் குறித்து அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்துவருவதற்கான பல சான்றுகளில், இந்தப் பாகுபாட்டுப் போக்கும் தலையாயதெனக் கொள்வதில் தவறில்லை!

ரிசர்வ் பாங்கியில் அதிகப் பற்று

பீகார் அரசே முதலிடம் பெறுகிறது

புதுடில்லி, பிப். 22—

ரிசர்வ் பாங்கியில் அதிகப் பற்றுப் பெற்றுள்ள ஐந்து மாநிலங்களில், தமிழகமே மிகக் குறைவான அதிகப் பற்றுத் தொகை பெற்றிருக்கிறது!

பீகார், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்கள் தமிழகத்தைவிடக் கூடுதலாகத் தொகை பெற்றுள்ளன.

அதிகப் பற்றுப் பெற்றுள்ள மாநிலங்களிலேயே முதலிடம் பெற்றிருப்பது பீகார்தான் (ரூ. 26.86 கோடி); தமிழக அரசு, ரூ. 1.21 கோடி மட்டுமே பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இராஜஸ்தான் ரூ. 10.53 கோடியும், ம. பி. ரூ. 8.79 கோடியும், ஒரிசா ரூ. 3.62 கோடியும் பெற்றுள்ளன.

மணமாகாத ஆசிரியைகளுக்கு பேறுகால விடுமுறை

ஜம்மு-காஷ்மீரில், அரசு நடத்தும் பள்ளிகளில் எப்படி ஊழல்கள் மலிந்துள்ளன என்பதற்குச் சான்றாகச் சில செய்திகள் வெளியாகியுள்ளன.

கல்வி அதிகாரிகள் சள்ளிக்கூடத்துக் கணக்குகளைத் தணிக்கை செய்தபொழுது, 'மக்கட் பேற்றிற்காக விடுமுறையில் சென்றவர்கள்' என்ற பட்டியலில் 300 ஆசிரியைகளில் பெரும்பாலோர் திருமணமாகாதவர்கள் என்று தெரியவந்திருக்கிறது!

அதுமட்டுமல்ல; அவர்கள் விடுமுறையில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்ட காலத்திலும் அவர்கள் வேலை செய்திருக்கிறார்கள்.

அவர்கள் பெயரைப் பயன்படுத்திப் பணம் ஈட்டுவதற்காகவே பள்ளி நிர்வாகிகள் இந்த முறையைக் கையாண்டு வந்துள்ளதாகத் தெரிகிறது!

கட்சிக் கட்டளை தூக்கியெறியப்பட்டது

ஆங்கிலத்திலேயே பேச தென்னக ச. சோ. கட்சி முடிவு

புதுடில்லி, பிப். 23—

தென்னாட்டைச் சேர்ந்த, சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும், தங்கள் கட்சியின் மேலிடத்துக் கட்டளைக்கு மாறாக, நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்திலேயே பேசுவது என்றும், ஆங்கிலத்திலேயே முக்கிய கேள்விகளைக் கேட்பது என்றும் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

"ச. சோ. கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்தியிலோ அல்லது ஏதாவது ஓர் இந்திய மொழியிலேதான் பேசவேண்டும்" என்பது அந்தக் கட்சித் தலைமையின் கட்டளையாகும்.

வழக்கமாக கன்னடத்தில் பேசும் திரு. ஜே.எச். பட்டீல், காங்கிரசு உறுப்பினர் தமது இருக்கையில் இல்லாதது குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது ஆங்கிலத்திலேயே பேசினார்.

கேரளத்தைச் சேர்ந்த திரு. மங்களத்துமடம், திரு. அரங்கில் ஸ்ரீதரன், திரு. விசுவாம்பரம் ஆகியோர், 'ஆங்கிலத்திலேயே பேச அனுமதிக்க வேண்டும்' என்று தங்கள் கட்சித் தலைமைக்கு வேண்டுகோள் விடுத்தனர்; தங்களுக்கு இந்தி தெரியாது என்றும், மலையாளத்தில் பேசினால் மற்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்; இந்தக் கோரிக்கையை, அந்தக் கட்சித் தலைமை நிராகரித்துவிட்டது.

இதனால் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஆங்கிலத்தில் நல்ல நாவன்மைபடைத்த பலரும் மனமுடைந்துபோனார்கள்; அவர்கள் இப்போது, 'ஆங்கிலத்திலேயே பேசுவது' என்று முடிவு செய்துவிட்டார்கள்!

இது குறித்து அந்தக் கட்சியின் தலைமை என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பது தெரியவில்லை!

ஆலமரத்து ஜோதிடர்கட்கு அடிக்கிறது யோகம்!

சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு, புதிய 'மகாராஜா' ஒருவருக்குப் புதிய பதவி ஒன்றைக் கொடுத்தது; பெயர்தான் 'மகாராஜா'வே தவிர, மண்ணாளும் மன்னர்கள் பரம்பரையில் வந்தவரல்லர் அவர்! 'மண்ணுக்குள்ளிருக்கும் தண்ணீரைக் கண்டுபிடித்துக் கூறும் 'அற்புத சக்தி' படைத்தவர் அவர்' என்று கூறப்பட்டு, அவருக்கு, 'பானிவாலா மகாராஜா' என்ற பெயரையும் சூட்டி பெரிய விளம்பரம் செய்தார்கள் வடநாட்டினர்!

மாதம் ஆயிரம் ரூபாய் ஊதியமாகவும், மற்ற வகைப் படிச் செலவுகளையும், எடுபிடிகளையும் அனுபவித்துக்கொண்டு, 'டில்லி சாம்ராஜ்பத்தின் ஆஸ்தான' விற்பன்னராகிவிட்ட அந்த பானிவாலா மகாராஜாவின் 'குட்டு' இரண்டோர் ஆண்டுக்குள்ளேயே 'அம்பலமாகி', அவரது பதவியும் அற்பாயுளில் முடிந்த கதை, நாடறிந்த ஒன்றாகும்!

"ஜோதிடத்தில் எனக்கு நம்பிக்கையில்லை; ஜோதிடத்தின் பெயரால் வயிறு வளர்ப்பவர்களெல்லாம் சோமபேறிகள் — நாட்டைக் கெடுக்கும் புல்லுருவிகள்" என்று கூறி, தமக்கிருக்கும் பகுத்தறிவு உணர்வை அவ்வப்போது வெளிக்காட்டிக்கொண்ட பண்டித நேருவின் தலைமையிலான அரசுதான், 'பானிவாலா மகாராஜா'வை வேலைக்கு அமர்த்தியது!

எங்கே தோண்டினால் தண்ணீர் கிடைக்கும் என்பதை அறிய விஞ்ஞான அடிப்படையில் காரியங்களில் ஈடுபடுவதற்குப் பதில், 'பானிவாலா மகாராஜா'வைத் தருவித்துக் கேட்டால், அவர் தமது 'ஞானதிருஷ்டி'யால் கண்டறிந்து கூறுவார்—என்று மத்திய அரசு சிறிதும் கூச்சமில்லாமல் அறிவித்திருந்தது!

பல இடங்களில் அவரை அழைத்துப் பணத்தையும் செலவிட்டுப் பார்த்தனர்! தெனாலிராமன், குதிரை வரைந்து காட்டிய கதையாகவே அமைந்தது! ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்த பொதுமக்களின் கண்டனத்துக்கு ஆளான டில்லி, பின்னர், 'பானிவாலா மகாராஜா'வுக்குச் சீட்டுக்கொடுத்து வீட்டுக்கு அனுப்ப நேர்ந்தது!

தந்தையாரின் பகுத்தறிவுக் கருத்துக்களை அப்படியே பிரதிபலிக்கும் வகையில், 'ஜோதிடத்தில் எனக்கு நம்பிக்கையேயில்லை' என்று அண்மையில்தான் அறிவித்தார்—இன்றையத் தலைமையமைச்சரான திருமதி இந்திரா காந்தி!

பண்டித நேருவும், அவர் திருமகளாரும் பிறந்த உத்தரப் பிரதேசம், எந்த அளவுக்குப் பகுத்தறிவொளி பெற்றுத் திகழ்கிறது என்பதற்கு இப்போது ஒரு சான்று கிடைத்துள்ளது.

ஜனசங்கத் தலைவர் திரு. உபாத்யாயா இரயிலில் பயணம் செய்தபோது மாண்ட மர்மம் என்ன என்பதைக் கண்டுபிடிக்கத் திராணியற்றுவிட்ட உ. பி. மாநில அரசு, தன்னிடம் உள்ள துப்பறியும் காவல்துறையைத் தக்கவிதத்தில் பயன்படுத்திக்கொள்வதை விடுத்து, 'ஜோதிடர்'களை நாடியுள்ளதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது!

சந்திரமண்டலத்துக்குச் செல்ல மனிதன் ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் இந்த விஞ்ஞானக் காலத்தில், 'ஜாதகரீதி'யாகப் புலனாய்வு செய்ய முனைந்திருக்கும் உ. பி. அரசின் துணிவே துணிவு! 'ஸ்காட்லாந்துயார்டு' துப்பறியும் நிபுணர்களெல்லாம், உ. பி. அரசின் மூளையைப் பிச்சை வாங்க வேண்டும்!

'உணவுப் பஞ்சத்தைப் போக்க எலியைப் பிடித்துத் தின்னலாம்' என்ற அரிய ஆய்வுரையை நாட்டிற்கு வழங்கிய காங்கிரசு அமைச்சர் அரசாண்ட மாநிலம் அல்லவா உத்தரப் பிரதேசம்!

இப்படிப்பட்ட அரிய கண்டுபிடிப்புக்களையெல்லாம் உத்தரப் பிரதேசத்திலிருந்து நாட்டு மக்கள் நிரம்ப எதிர்பார்க்கலாம்!

இனி, டாக்டர் பஞ்சத்தைக்கூட உ. பி. மாநிலம், வேறுவிதமாகச் சமாளிக்கக்கூடும்; மேலை நாட்டு மருத்துவமனைகளுக்குப் பதிலாக, 'மணி மந்திர ஔஷதாலய'ங்களை மாநிலத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஏற்படுத்தி, அவற்றில், 'மந்திரவாதிகள்' என்போரை நியமித்து, மக்களின் நோய்களையெல்லாம் தீர்த்துவைக்க முன்வரலாம்!

தனது மாநிலத்தில் டாக்டர்கள் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் தமிழ்நாட்டிலிருக்கும் டாக்டர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கும் இராஜஸ்தான் மாநில அரசு, தனக்குப் பக்கத்திலுள்ள உ. பி. அரசின் 'மூளை'யை இரவல் பெற்று, தனது 'பஞ்ச'த்தை எளிதில் போக்கிக்கொள்ளலாம்!

மற்ற மாநிலங்களில் உள்ள ஆலமரத்தடி ஜோசியர்களும், வேப்பிலை அடிக்கும் 'பூசாரி'களும், உ.பி.மாநிலத்தை நோக்கிப் படையெடுக்கலாம், அங்கே நல்ல கிராக்கி ஏற்படலாம்; ஆனால் ஒன்று; அவர்கள் 'பாஷை'யான இந்தியைக் கற்றுக்கொண்டுதான் அங்கே நுழைய வேண்டும்; இல்லையேல், அந்த நாட்டுச் 'சாதுக்கள்' சும்மா விடமாட்டார்கள்! ஈட்டியையும் வேலையும் தூக்கிக்கொண்டு பாய வருவார்கள்!

—'மாவன்னாசேனா'

தமிழ்நாட்டிலா தொழில் மந்தம்?

ஓலமிடும் காங்கிரசாருக்கு ஒரு செய்தி?

புதுடில்லி, பிப். 24—

தொழில் மந்தநிலை காரணமாகத் தமிழகமும் ஓரளவு பாதிக்கப்பட்டது; இருந்தபோதிலும், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், தமிழகத்தின் நிலை ஓரளவு சீராகவே இருப்பதாகத் தெரிகிறது தமிழ்நாட்டின் பெரிய தொழில் நிறுவனங்களை, தொழில் மந்தம் அதிகமாகப் பாதிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

உற்பத்திப் பண்டங்களுக்கான மூலப்பொருள்களில் பற்றுக்குறை—பொருளாதாரத்தில் சரிவு—விற்பனையில் தேக்கம்—தொழிலாளர் பிணக்கு—இவை போன்ற காரணங்களால் இன்று நாடெங்கிலுமே தொழிலில் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

தொழிலகங்கள் நிரம்பிய மாநிலமான மேற்கு வங்கம், இந்த மந்த நிலை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது; தொழில் மந்தம் அல்லது தொழிலாளர் தகராறு காரணமாக மூடப்பட்ட 401 தொழிற்சாலைகளில் 65 தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன; தொழிற்சாலைகள் மூடப்பட்டதையொட்டி மாநிலத்தில் சுமார் 65,000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர்; அவர்களில் சுமார் 12,000-பேர்களுக்குத்தான் மீண்டும் வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

குசராத் மாநிலத்தில் நெசவாலைகள், இந்தியக் கருவிகளுக்கான தொழிற்சாலைகள், சிமெண்டு, ரப்பர் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் பலவற்றில் ஆட்குறைப்பு செய்யப்பட்டன. இதன் காரணமாக 5,348 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழந்தனர், போதிய அளவுக்கு மூலப் பொருள் கிடைக்காததும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் வாங்குவாரின்றித் தேங்கிவிட்டதும் குசராத்தில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

அரியானாவில் சைக்கிள் தொழிற்சாலைகளும், பூட்டுத் தயாரிக்கும் தொழிலகங்களும், மற்றும் பல சிறு தொழில்களும் மூலப்பொருள்கள் பற்றுக்குறையின் விளைவாகப் பெரும் அளவுக்கு ஆட்குறைப்புச் செய்துவிட்டன.

பீகாரில் தொழில் மந்தம் காரணமாக சிமெண்டு, மைக்கா, மற்றும் சர்க்கரை ஆலைகள் பாதிக்கப்பட்டன. மூலப்பொருள் பற்றுக்குறையோடு மின்சார வினியோகமும் குறைந்துபோனதால், ஆந்திர மாநிலத்திலும் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு பலர் வேலையிழந்தனர்.

ஆந்திராவில் தொழிலகங்கள் பாதிக்கப்பட்டதற்கு பாங்கிகள் அளிக்கும் கடன் வசதி கிடைக்காமல் போனதும் ஒரு காரணம் என்று தெரிகிறது.

இளைஞர் கடமை!

முன்னாள் தளபதியின் அறிவுரை

"இளைஞர்கள், தாங்கள் எந்தக் குழு அல்லது அமைப்பில் உறுப்பினர்களாக இருக்கிறார்களோ அவற்றின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்பணிந்து நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"மனத்தில் விழிப்புணர்ச்சியும், தூய்மையும், தெளிந்த அறிவும், தன்னலமற்ற தன்மையும், உயர்ந்த கட்டுப்பாட்டு உணர்ச்சியும் கொண்ட இளைஞர்களால்தான் தலைவர்களாக விளங்க முடியும்.

"நீங்கள் நல்ல எசமானர்களாக இருக்க விரும்பினால், நல்ல பணியாட்களாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்! நீங்கள் கசடு அறக் கற்க வேண்டும்; கற்றதன்பின் அதன்படி நிற்கவேண்டும்; கல்வி வயிற்றுப் பிழைப்புக்கான சாதனமாக இருக்கக் கூடாது"

என்று பெங்களூரில், இளைஞர்கள் கூட்டமொன்றில் பேசும்போது, முன்னாள் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் கே. எம். கரியப்பா கேட்டுக்கொண்டார்.

கலைஞர்களுக்குப் பயணச் சலுகை

டில்லி அரசுக்குத் தமிழக அரசு கோரிக்கை

சென்னை, பிப். 21—

"நாட்டியம், நாடகம் முதலியவைகளை நடத்தும் கலைஞர்களுக்கு அரைக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வந்ததை பிப்ரவரித் திங்கள் முதல் தேதியிலிருந்து இரயில்வே இலாகா ரத்துசெய்து விட்டது வருந்தத் தக்கது; ஆகவே, இந்த முடிவு பற்றி மீண்டும் பரிசீலனை செய்யும்படி மத்திய அரசின் இரயில்வேத்துறை அமைச்சகத்திற்கு தமிழக அரசு எழுதிக் கேட்டுக் கொள்ள முடிவு செய்திருக்கிறது"

என்ற தகவலை, பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, மேல் சபையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

இப்பிரச்சினை குறித்து விவாதிக்க அவசர கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை எஸ் டி. சுந்தரம் கொண்டு வந்தார்.

போதை தரும் மருந்துகள் விற்பனை

கட்டுப்படுத்தத் தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, பிப். 21—

"கடைகளில் விற்கப்படும் அரிஷ்டம், அஸ்வம் போன்ற மருந்துகள் போதை தருவதற்காக தவருகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க 1954-ம் ஆண்டில் இயற்றப்பட்ட மருந்துக் கட்டுப்பாடு விதிகளின்கீழ் இந்த மருந்துகளைக் கொண்டுவந்து, அவைகளைத் தயாரிப்பதிலும் விற்பனை செய்வதிலும் கட்டுப்பாடு விதிக்க மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது"

என்ற தகவலை சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, மேலவையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

கீழப்பழுவூர் எம்.ஜி.ஆர். மன்றம்

கீழப்பழுவூர் எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் வருமாறு:—

தலைவர்: மா. சண்ணன்; துணைத் தலைவர்: அ. செங்கமுத்து; செயலாளர்: பழ. சுப்பிரமணியம்; துணைச்செயலாளர்கள்: முகமது சரீப், ஜே. இராமச்சந்திரன்; பொருளாளர்: நா. கோபால்; துணைப் பொருளாளர்: பெ. சுந்தரம்; எட்டுப்பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

மன்றத் துவக்க விழாவும் பொதுக்கூட்டமும் திரு. ம. இராசு தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் வெ. கண்ணன், கோ. சிவபெருமாள், கி. நாகராசன், மா. கண்ணன், விசுவம், இளங்கோவன், க. சீனிவாசன், ம. வரதராசன் ஆகியோர் பேசினர்.

ஒண்டிப்புதூரில் இந்தி ஒழிப்பு வெற்றி விழா

தமிழக அரசு இந்தியைத் தமிழகத்திலிருந்து அடியோடு ஒழித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதையும், மொழிக் கொள்கையில் மாணவ-மாணவியர் இந்தியை ஒழித்து இப்பெரு வெற்றி பெற்றுப் பள்ளி திரும்பியதையும் முன்னிட்டு கோவையை அடுத்த ஒண்டிப்புதூரில் 5—2—68 அன்று தி. மு. க. கிளைச் செயலாளர் ஆர். ஜான் தலைமையில் எஸ். சண்முகம், சொ. செயராமன், இராமசாமி ஆகியவர்கள் முன்னிலையில் துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 3,500 மாணவ-மாணவியர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் எம். ஜி. ஆர். மன்றம், அண்ணா படிப்பகம், உதய சூரியன் படிப்பகம் ஆகியவை கலந்துகொண்டன.

கழக வழக்கறிஞர்கள் மாநாடு தள்ளிவைப்பு

"அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்கிணங்க மார்ச் திங்களில் நடைபெறவிருந்த தமிழக தி. மு. கழக வழக்கறிஞர்களின் இரண்டாவது மாநாடு, அண்ணா அவர்களின் வசதிக்கேற்ப ஏப்ரல் திங்கள் இறுதியில் நடைபெறும்"

என்று, மாநாட்டுப் பொறுப்பாளர் பா. மாணிக்கவாசகம் அறிவிக்கிறார்.

வெல்ல உற்பத்திக்குக் கட்டுப்பாடு

சென்னை, பிப். 21—

"'ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வெல்லம் உற்பத்தி செய்யக்கூடாது' என்று கட்டுப்படுத்துவதற்காக மத்திய அரசுடன் கலந்தாலோசித்து, 'சட்டம் கொண்டு வரலாமா' என்று மாநில அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், மேலவையில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத் திருத்த மசோதாமீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையில் கூறினார்.

வெல்லம் காய்ச்சும்பொழுது கரும்பில் 40 சதவீதம் வீணாகி விடுகிறது என்றும், அதைச் சக்கையாகக் கொளுத்தி வீணாக்குகிறார்கள் என்றும், இது பெரிய நாட்டுத் துரோகம் என்றும் அமைச்சர் சொன்னார்.

மின்கழகக் கணக்காயர் சங்க -- நெல்லைக் கிளை நிர்வாகிகள்

தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் சங்க திருநெல்வேலி கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் திரு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது, ச. பஞ்சரத்தினம் செயலாளராகவும், கா. தங்கவேலு துணைச்செயலாளராகவும், ஏ. இராமசாமி பொருளாளராகவும், மாணிக்கவாசகம், ச[illegible]பன், வி. ஏ. இராசன் ஆகியோர் பொதுக்குழு உறுப்பினர்களாவும், ஏ. பாலசுப்பிரமணியன், கே. வைத்தியலிங்கம், எஸ் பொன்னம்பலம், எஸ். முத்தையா, வி. சண்முகசுந்தரம், வி. எம். அருணாசலம், ஆர். சங்கரநாராயணன், டி. செல்வராஜ், அவைரத விநாயகம், எஸ். கந்தசாமி, ஜி. இராமன், எஸ் பிச்சையா ஆகிய 12-பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

4—2—68-ல், திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க கரூர் கிளையின் பேரவைக் கூட்டம், தோழர் பரமத்தி சண்முகம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, புதிய ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: பரமத்தி சண்முகம்; துணைத் தலைவர்: ப. சக்திவேலு; செயலாளர்: வி. சுப்பிரமணியம்; துணைச்செயலாளர்: எம். கொண்டையப்பன்; செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். கன்னையன், மருதமுத்து, பி. அங்கமுத்து, து. சின்னையன், எம். பெரியசாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: கே. எம். நடராசன், கு. இராதா விசயன், கே. பத்மநாபன்.

மற்றும் தமிழக அரசு ஆட்சி மொழித் தொடர்பாக மேற்கொண்ட முடிவுகளைப் பாராட்டியும், சிறு சேமிப்பு இயக்கத்தில் தொழிலாளர்கள் அனைவரும் சேர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டி வரும் நிதிக்கு, பிப். 10-ந் தேதி வந்த தொகை ரூ. 1,178.00 ஆகும்.

இத்துடன் மொத்தம் ரூ. 33,94,806.75 சேர்ந்துள்ளது.

தேசியத்தலைவர்கள் படங்களை அகற்றும் நோக்கமில்லை

மேலவையில் அண்ணாவிளக்கம்

சென்னை, பிப். 21—

"தேசியத் தலைவர்களின் உருவப் படங்களை வைத்து வருவதுமன்றி அவை வைக்கப்பட்டுள்ள இடங்கள் தூய்மையாகவும், எழில்மிக்க தோற்றத்துடனும் இருக்கின்றனவா என்று கண்காணிப்பதும் அரசின் கொள்கையாகும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், மேலவையில் கேள்வி ஒன்றுச்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலிருந்து தேசியத் தலைவர்கள் படங்கள் அகற்றப்பட்டனவா?" என்று கேட்கப்பட்ட போது அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"மதுரை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் விசாரணை மண்டபத்தின் சுவர்களுக்கு 1967 ஏப்ரல் மாதத்தில் பூச்சு வேலை நடந்து கொண்டிருந்ததால், இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர்களுடைய உருவப் படங்களும், இந்தியத் தலைமையமைச்சரின் உருவப் படமும் அப்போது அங்கிருந்து அகற்றப்பட்டன; அவை பின்னர், அந்தந்த இடங்களில் மீண்டும் பொருத்தப்பட்டன."

"தேசியத் தலைவர்களின் படங்களை அப்புறப்படுத்த வேண்டும் என்பது அரசின் கொள்கை அல்ல" என்று மற்ருெரு கேள்விக்குப் பதிலளிககையில் முதலமைச்சர் கூறினார்.

5,341 பேர் பட்டம் பெற்றனர்

சென்னை, பிப். 22—

இன்று நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், மொத்தம் 5,341 பேர் பட்டம் பெற்றனர்.

இவர்களில் தபால் மூலம் பட்டம் பெற்றவர்கள் 2,705 பேர்.

468 மகளிர், நேரில் பட்டம் பெற்றனர்.

6 மாணவர்களும், 7 மகளிரும் பரிசுகள் பெற்றனர்.

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமைதாங்கினார்.

ராமநாதபுரம் தலைநகர்

'மாற்றும் உத்தேசமில்லை'-- அமைச்சர் தரும் தகவல்

சென்னை, பிப். 21—

"மதுரையில் இயங்கும் இராமநாதபுரம் அரசு அலுவலகங்களை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றிவிட்டு, இராமநாதபுரத்தை மாவட்டத்தின் தலைநகராக்கும் உத்தேசமில்லை"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், மேலவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"மதுரை கலைக்கூடமும், ரெவினியூ போர்டும் அப்படி மாற்றுவதற்கு நேர் எதிரான கருத்தைத் தெரிவித்துள்ளன; மதுரையானது கிழக்கு—மேற்கு ஆகிய இரண்டு இராமநாதபுரம் பகுதி மக்களுக்கும் மத்தியில் அமைந்திருக்கிறது; மிகச் சுலபமாகப் போய்ச் சேரக் கூடிய இரயில்—சாலை மார்க்கங்கள் கொண்டதும் ஆகும்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"இதுபற்றி (தலைநகரை மாற்றுவது) அவசர முடிவு எதையும் அரசாங்கம் மேற்கொள்ளாது" என்றும் அமைச்சர் உறுதி கூறினார்.

சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

புதிய நிர்வாகிகள் தேர்வு

சன. 5, 6-ஆகிய நாட்களில், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டம், திரு. சா. முத்து தலைமையில் நடைபெற்றது; சி. ஆர். கோலப்பா, எஸ். மாணிக்கம், சி. மார்கண்டன் ஆகியோர் இதுவரையில் நடந்த சங்க நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறினர்.

அடுத்து, சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: எஸ். மாணிக்கம்; துணைத் தலைவர்: டி. ஜி. துரைசாமி; செயலாளர்: சி. ஆர். கோலப்பா; துணைச்செயலாளர்: சி. மார்கண்டன்; பொருளாளர்: ஆர். கதிர்வேலு; செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. எம். இராமசாமி, ஆர். கண்ணன், பி. ஜி. முனுசாமி, எம். கோபால், என். துரைராசு, ரு. ஞானவேலன்.

அடுத்து பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்

ஒத்திவைக்கப்பட்டதற்குக் காரணம்--அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 21—

"செலவு அதிகமாகிறது என்பதால், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

"சென்னைக்குக் காவிரியிலிருந்து குடிநீர் கொண்டுவருவதற்குக் காலனுக்கு ரூ. 1.30 செலவாகிறது; கடல் நீரைக் குடிநீராக்குவதற்குக் காலனுக்கு ரூ. 2-முதல் ரூ. 4-வரை செலவாகிறது"

என்றும் அமைச்சர், கேள்விநேரத்தின்போது தெரிவித்தார்.

தோட்டாவுக்குப் பதில் ரவை

தமிழக அரசு பரிசிசிலனை-- முதலமைச்சர் தகவல்

சென்னை, பிப். 21—

"துப்பாக்கியில் தோட்டாவுக்குப் பதில் உயிர்ச் சேதம் விளைவிக்காத ரவை போட்டுச் சுடமுடியுமா என்பதுபற்றிப் போலீசுத் துறையினருடன் கலந்து அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது"

என்று சட்டமன்ற மேலவையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

என்.சி.சி. பயிற்சிக்குத் தமிழில் கட்டளைச் சொற்கள்

தமிழக அரசின் யோசனையை டில்லிபரிசிலனை செய்கிறதாம்

புதுடில்லி, பிப். 22—

என். சி. சி. பயிற்சிக்கான கட்டளைச் சொற்கள், 'தமிழில்தான் இருக்கவேண்டும்' என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு யோசனை தெரிவித்திருந்ததல்லவா?

"அந்தக் கோரிக்கை, அரசின் பரிசீலனையில் இருக்கிறது" என பாதுகாப்புத் துணையமைச்சர் எம். ஆர். கிருஷ்ணா, மக்களவையில் தெரிவித்தார்.



டிவிஎஸ் டெலிவரி வான்பாடி

எண்ணெய்ச் செலவும் டயர் தேய்மானமும் குறைவு. பல்லாண்டுகள் உழைக்கும். உறுதியானது.

பாடிகள் கட்டுவதில் சுமார் நாற்பது ஆண்டுகள் அனுபவமுள்ளது டிவிஎஸ். அவரவர் தேவைக்கேற்ப எந்தவிதமான சேஸிஸ் மீதும் லேசான, உழைப்பிற்கு உறுதியான பாடிகளைத் தயாரிக்கிறது டிவிஎஸ்.

TVS

டி.விஎஸ் — இந்தியாவிலேயே பாடிகள் கட்டுவதில் மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்—மதுரை (டிவிஎஸ் ஸ்தாபனம்)

D/4259

கிராமப் பொது நிலத்தை விற்பனை செய்ய முனைந்த காங்கிரசுக்காரர்

தடுத்து நிறுத்தி இரவு பகலாகக் காத்து வருகின்றனர் மக்கள்

கா. வேழவேந்தன் — குசேலர் தலையீட்டால் அமைதி நிலவுகிறது

சென்னை, பிப். 24—

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்ணன் கோட்டை கிராமத்திலுள்ள வனப்பதிகாடு, ஜமீன் எஸ்டேட்டைச் சேர்ந்தது; இதை, 1963-ஆம் ஆண்டில் அரசு மேற்கொள்வதாகச் சட்டம் இயற்றப்பட்டது. இதனையறிந்த மேற்படி ஜமீனில் வேலை பார்த்து வந்த கர்ணம் கிருஷ்ணசாமிபிள்ளை என்பவரும், காங்கிரசு ஊராட்சிமன்றத் தலைவர் வரதப்ப நாயுடுவும், அவர் உறவினர்கள் சந்திரப்ப நாயுடு, ஜானகிராம் நாயுடு ஆகியோரும், இந்தக் காட்டை மேற்படி ஜமீன்தார் தங்களுக்கு விற்றுவிட்டதாகவும், இந்த 400 ஏக்கர் நிலத்துக்கும் ஜமீன்தார் பட்டா கொடுத்திருப்பதாகவும் கூறி மற்றொருவருக்கு விற்றுவிட்டனர். இந்த நிலத்தில் கிராம மக்கள், ஆடு மாடுகளை மேய்த்து அனுபவித்து வந்தனர்.

அந்த நிலம் விற்கப்பட்டதாகக் கூறப்படும் செய்தியறிந்து கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்; தொடர்புடைய அதிகாரிகளுக்கு மனுச் செய்து முறையிட்டுக் கொண்டனர். அரசாங்கம் 'சர்வே' நடத்தப் போவதாகவும், செட்டில்மெண்ட் செய்யும்போது கிராம மக்கள் தங்கள் குறைகளைக் கூறலாம் என்றும் பதில் வந்தது.

இதுபற்றி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கா. வேழவேந்தன் அவர்களிடமும் கிராம மக்கள் முறையிட்டனர்; அவரும், தமது கருத்தை அதிகாரிகளுக்குக் கடித மூலமும் நேரிலும் தெரிவித்தார்.

இந்த நிலையில் 18—2—68 அன்று சென்னையிலிருந்து ஒரு லாரி நிறைய வேலி போடுவதற்கான சாமான்களை ஏற்றிக்கொண்டு நிலத்தை வாங்கியதாகக் கூறப்படும் நபர் வந்தார். அந்த நிலத்தை மேற்சொன்ன ஐவரும் தனக்கு விற்றுவிட்டதாகக் கூறினார்; உடனே கிராம மக்கள் எதிர்த்து நின்று, 'உம்மிடம் விற்ற அந்த ஐந்து நபரையும் அழைத்துக்கொண்டு வா' என்று கூறினர்; ஆனால், 'அந்த ஐவரும் தலைமறைவாகிவிட்டதாக'க் கூறப்படுகிறது.

கிராம மக்கள் இரவு பகலாக, அந்த இடத்தைக் காத்துவருகின்றனர். காவல் துறையினரும் கலவரம் ஏற்படாவண்ணம் தக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற கழக உறுப்பினர் திரு. ஜி. குசேலர் அந்த இடத்திற்குச் சென்று ஏழை மக்களுக்கு ஆறுதல் கூறி, அமைதியாக இருக்கும்படிக் கேட்டுக்கொண்டதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சந்தித்து நியாயம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேற்கண்ட இத்தகவலை ஊராட்சிமன்ற உறுப்பினர்களான பெருமாள், காட்டன், செல்லன், மற்றும் கிராம மக்கள் சார்பில் தெரிவிக்கின்றனர்.

திருவல்லிக்கேணித் தொகுதி தி. மு. க. பிரதிநிதிகளுக்கு:

"26—2—68 இரவு 9-மணிக்கு சென்னை-திருவல்லிக்கேணித் தொகுதி தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், மவுண்ட் ரோடு கழக அலுவலகத்தில் நடைபெறும்; அதுபோது தமிழக அரசு அமைந்த ஓராண்டு நிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஆலோசனை செய்ய வேண்டி உறுப்பினர் அனைவரும் தவறாது வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்"

என்று, தொகுதிச் செயலாளர் மு. வரதராசன் அறிவிக்கிறார்.

மருத்துவமனையில் திருச்சி வட்ட தி. மு. க. செயலாளர்

திருச்சி வட்ட தி. மு. க. செயலாளர் வி. எம். கணேசன், வயிற்றில் ஏற்பட்டுள்ள கோளாறின் காரணமாக சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார். இன்னும் பத்து நாட்களில் குணமடைந்து ஊர் திரும்புவார். அதற்கிடையில் முக்கிய தகவல்கள் தெரிவிக்க விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதுக:—

வி. எம். கணேசன்,
17-வது கே. சாமி வார்டு,
ஸ்டான்லி மருத்துவமனை,
இராயபுரம்—சென்னை-13.

வண்ணை பொன்னுசாமி உடல்நிலை

வண்ணை கழகத் தோழர் திரு. எஸ். பி. பொன்னுசாமி (தோழியர் எஸ். பி. சற்குணம் தந்தையார்) நெஞ்சு வலி காரணமாக மண்ணடியில் உள்ள டாக்டர் வர்மன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, குணமடைந்து வருகிறார்.

மாநிலத் தொழில் வளர்ச்சிக்கு டில்லி முட்டுக்கட்டை

மைசூர் தொழிலமைச்சர் மனக் குமுறல்

சென்னை, பிப். 23—

"தொழில் வளர்ச்சித் திட்டங்களை முடிவு செய்வதிலும், அவற்றைச் செயல்படுத்துவதிலும் மாநிலங்களுக்கு அதிகச் சுதந்தரம் இருக்கவேண்டும்.

"மாநிலங்களுக்கு இப்போது இருந்துவரும் சுதந்தரம் மிகவும் குறைவானதே; தொழில்கள் தொடர்பாக மத்திய அரசுக் கட்டத்தில் லைசென்சு வழங்கும் ஏற்பாடு இருந்துவருவதை நீக்கிவிடலாம்"

என்று, கருநாடக மாநில நிதி—தொழில் அமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே, இங்கு [illegible]ளர்களிடம் கருத்தறிவித்தார்.

உலகப் பொருட்காட்சியில் கருநாடக அரசின் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'மைசூர் நாள்' விழாவில், துணைத் தொழிலமைச்சர் ஏ. பி. அப்பண்ணாவுடன் கலந்துகொண்ட அவர் மேலும் பேசியதாவது:—

"மத்திய அரசில் உள்ள சில உயர்தர அதிகாரிகளின் விருப்பத்தைச் சார்ந்திருக்கும் நிலைமையும், 'சிவப்பு நாடா' முறையும் நீடிப்பது வருந்தத்தக்கது.

நமக்கு உதவ முன்வரும் அயல் நாட்டுத் தொழிலதிபர்கட்கும் சலிப்பு ஏற்படும் முறையில் ஒரு திட்டத்தை இறுதியாக்க முடிவு செய்ய தேவையற்ற முறையில் காலதாமதம் செய்யப்படுகிறது; இந்தக் கால தாமதத்தை நீக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல்வேறு தொழில் திட்டங்களுக்கும் தேவையான நிதியுதவியைப் பெறுவதில் மாநிலங்களுக்குள்ள இடர்ப்பாட்டையும் நீக்கவேண்டும்.

'ரூ. 25-இலட்சம்வரை முதலீடு செய்யும் தொழில்களுக்கு மத்திய அரசின் லைசென்சு தேவையில்லை' என்று தற்போது இருக்கும் வரம்பை மேலும் உயர்த்தவேண்டும்.

தமிழகத் தொழிலதிபர்கள் மைசூருக்கு வந்து தொழில்களைத் துவக்க வேண்டுகிறேன். அப்படி வருபவர்கட்கு மைசூர் அரசு எல்லா வசதிகளையும் செய்தளிக்கும்."

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்

தீவிரப்படுத்தத் தமிழக அமைச்சரவை முடிவு

திரைப்பட மூலம் பிரசாரம் செய்ய ஏற்பாடு

சென்னை, பிப். 23—

தமிழக அமைச்சரவைத் துணைக் குழுவின் கூட்டம், தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.

தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யும் வகையில் ஒரு திரைப்படத்தை வெளியிடுவது என்றும், அதற்காகத் திரைப்படக் கலைஞர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக அடுத்த மாதத்தில் நடிகர்—நடிகைகளை முதலமைச்சர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

அதேபோல், தொழிலாளர்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாக்குவதற்குத் தொழில் அதிபர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டது; இது தொடர்பாகத் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தொழில் அதிபர்களிடம் பேச்சுவார்த்தை நடத்துவார்.

மாவட்டங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டக் கருத்தரங்குகளை நடத்திப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்த சமூக சேவை நிலையங்களான ஒய். எம். சி. ஏ., லயன்ஸ் கிளப் போன்றவைகளின் ஒத்துழைப்பைப் பெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

'லூப்' வளையம் பொருத்திக் கொள்ளும் தாய்மார்களுக்கு அளிக்கப்படும் பணத்தை ரூ. 5 லிருந்து ரூ. 6-ஆக உயர்த்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

'எழுச்சி' நாள் மூலம் கழக அரசு கண்ட வெற்றி

தூத்துக்குடித் திட்டத்துக்கு டில்லி அனுமதி

நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்துகிறார் அமைச்சர்

புதுடில்லி, பிப். 24—

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துவிட்டது.

"எல்லாப் பருவத்திற்கும் ஏற்றதாக நங்கூரம் பாய்ச்சும் துறைகள் ஐந்துகொண்டதாகத் தூத்துக்குடித் துறைமுகம் அமையும்.

"நிலக்கரி, உப்பு, சிமெண்டு ஆகியவற்றுக்குத் தனித்தனியே ஒவ்வொரு துறை அமையும்; மற்ற இரண்டும் பொதுவான பண்டங்களுக்காகப் பயன்படும்.

"இந்த வசதிகளை அமைத்து முடிக்க ரூ. 22.80 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

"பிற்காலத்தில் ஏற்படும் கூடுதல் சரக்குப் போக்குவரத்தைச் சமாளிப்பதற்காக மேலும் ஒரு துறை கட்டவும், துணை வசதிகளை அமைத்துத் தரவும்: ரூ. 1.60 கோடி தேவைப்படும் எனவும் மதிப்பிடப்பட்டிருக்கிறது"

என்ற தகவல்களை மக்களவையில், கழக உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் வி.கே.ஆர்.வி. ராவ் தெரிவித்தார்.

தமிழகத்துக்கு ஆந்திர உயர்தர அரிசி

அமைச்சர் கே. ஏ. மதியழகன் முயற்சி வெற்றி

தமிழக உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்துப் பேசியதன் பலனாகத் தமிழ்நாட்டுக்கு 15,000 டன் உயர்தர 'மொலகுலுகுலு' அரிசி ஆந்திரத்திலிருந்து கிடைக்கும்

இன்னும் பத்து நாட்களுக்குள் 5,000 டன் அரிசி வந்து சேரும்; எஞ்சிய 10,000 டன்னும் மார்ச் இறுதிக்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடக்க இருப்பவை

25--2--68

புதுவை 13-வது வட்டம்

சின்னக்கடை தி.மு.க.துவக்க விழா; மாலை 6 மணிக்கு ஓதியஞ் சாலைத் திடலில்; தலைவர்: செ. கோவிந்தராசன்; கழகப் பெயர்ப் பலகைத் திறப்பு: எம்.ஏ. சண்முகம்; அண்ணா, நெடுஞ்செழியன், கருணாநிதி, எம.ஜி.ஆர். ஆகியோர் உருவப்படங்களை முறையே எஸ். ஆறுமுகம் பி.காம்., கு. முருகையன், சி.பி. திருநாவுக்கரசு பி.காம்., பி.எல்., ஏ. கிருட்டிணமூர்த்தி திறந்து வைப்பர்; பேசுவோர்: ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ., கே.என். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.. இ. குபேர், டி.ஏ.எஸ். பாலன் பி.ஏ.,பி.எல்., வி. முனுசாமி எம்.எல்.ஏ., எம். இராமன் எம்.எல்.ஏ.

26--2--68

கூத்தாநல்லூர்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு பெரிய கடைத் தெருவில்; தலைவர்: கு. பாலகிருட்டினன்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

சென்னை 1-வது வட்டம்

வள்ளுவர் மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு புதுவண்ணை அருணாசலீசுவரர் கோயில் தெருவில்; தலைவர்: வே. கோதண்டன்; பேசுவோர்: எஸ். இராகவானந்தம், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., க. அறிவழகன் எம்.எல்.சி., மா.வெ. நாராயணசாமி, து. கோவிந்தசாமி மற்றும் பலர்.

அருப்புக்கோட்டை

3, 4, 5, 6-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு நேரு திடலில்; தலைவர்: பாலசுந்தரம்; பேசுவோர்: மா. இராசாங்கம் எம்.எல்.ஏ., சிவ சண்முகசுந்தரனார், ப.பெ.ந. நல்லதம்பி, முனியசாமி.

அழிஞ்சிமங்கலம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு செல்லூர் பெரியார் திடலில்; தலைவர்: சி. இராமசாமி; பேசுவோர்; என். சோமசுந்தரம் எம்.எல்.ஏ., எஸ்.தியாகராசன் பி.ஏ.பி.எல்., இராசையா பி.ஏ பி.எல்., ஏ.அம்பலவாணன், பி. கணபதி, என். ரீக்கிரிசாமி எம்.சி., ஈ. வெள்ளத்துரை, பி. கோவிந்தன், அஞ்சான், சின்னையன்.

சிறுமதுரை

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: டி.என்.ஜீ.ஏ. மோகன்; அண்ணா படத் திறப்பு: அ.சே. குமாரசாமி பி.எஸ்சி.; பேசுவோர்: திரு. டி.ஏ.எஸ். பாலன் பி.ஏ.,பி. எல்., எம்.சி., செ.வி. கீர்த்தி, தி.வ. அண்ணாதாசன், தி.அ. பழனி, வை.அ. மணவாளன், வா. லோகநாதன்: தீ.ச. லோகநாதன். (முருகு பாண்டியனின் 'அண்ணாவின் ஆட்சி' கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

நிடாமங்கலம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு சீனிவாச பிள்ளை சத்திரத்திற்கு எதிரில்; தலைவர்: பி. இ. எம். ஜின்னா; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ.,கணேசன் எம்.எல் ஏ., கு. பாலகிருட்டிணன், சு. நாராயணசாமி.

புலவர் பொன்னிவளவன் நிகழ்ச்சிகள்

பிப். 25: மதுரை; 26: சென்னை 62-வது வட்டம்; மார்ச் 2: பொதட்டூர்ப்பேட்டை; 3: சேலம்; 8: நெல்லிக்குப்பம்; 16: சலகண்டபுரம்; 17: குடியேற்றம்; 30: உதகை.